## மொத்த தேசிய உற்பத்தியும் வருமானமும் செலவும்

### பொதுவான போக்கு

உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பினுல் அளவிடப் பட்டவாறுன இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றம் 1984 இல் முந்திய ஆண்டினைவிட சிறிதளவு முன்னேற்றமடைந்தது. உண்மையான மொத்த உள் நாட்டு உற்பத்தி 1983 இன் 5.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1984இல் ஏற்பட்ட இச் சாதகமான அபிவிருத்திக்கு உண்மை ரீதியிலான தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட சிறிதளவான வெளிப்பாய்ச்சலே காரணமாகும். இது மொத்தத் தேசிய வருமானத்தில் 1983 இல் ஏற்பட்ட 4.1 சதவீத அதிகரிப்பிற்கு மாறுக 5.3 சதவீத அதிகரிப்பினையேற்படுத்தியது.

1984 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி ரூ. 1,350,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1983 இனை விட 24 சதவீதம் கூடுதலானதாகும். மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட உண்மையான அதிகரிப்பினைக் கணக்கிலெடுப்பின் உள்ளடக்க விலைச் சுருக்கி 17.8 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு வேளாண்மை ஏற்றுமதிகளின் குறிப்பாக தேயிலை, இறப்பரின் உயர்ந்த விலைகள் காரணமாக ஏற்பட்டது.

பதிவாளர் நாயகத் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட தரவுகளின்படி இலங் கையின் நடு ஆண்டுக் குடித்தொகை 1984 இல் 156 இலட்சமெனத் தற்காலிக மாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1983 இனைவிட 1.2 சதவீதம் கூடியதாகும். எனவே தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 8,643 (ஐஅ டொலர் 340) ஆக அமைந்தது. உண்மை ரீதியில் தலைக்குரிய வருமானம் 1983 இன் 2.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4 சதவீதத்தினுல் அதிகரித்ததாக மதிப்பிடப் பட்டுள்ளது.

1984 இல் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் முந்திய ஆண்டின் 16 சதவீத முன்னேற்றத்தினைத் தொடர்ந்து மேலும் 14 சதவீத முன்னேற்றம் காணப்பட்டது. இதன் விளைவாக, உண்மைத் தேசிய வருமானம் அதாவது வர்த் தக மாற்று விகிதத்திலான மாற்றங்களுக்கேற்ப சீராக்கம் செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி 1983 இன் 5.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1984 இல் உண்மையான தேசிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு தேயிலை ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த இலாபங்களையும் முக்கிய இறக்குமதிகளின் குறிப்பாக பெற்றோலியம், சீனி என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளையும் பிரதிபலிக்கின்றது.

1984 இல் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய பங்கு தயாரிப்பு, மொத்த சில்லறை வர்த்தகம் என்பவற்றிலிருந்து வந்த வேளையில், வேளாண்மை போக்குவரத்து என்பவையும் வளர்ச்சிக்கான குறிப்பிடத்தக்க மூலங்களாக விளங் கின. அண்மை ஆண்டுகளில் உண்மையான மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி யில் வேளாண்மை முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்த நிலைக்கு இது மாறுன தாகும். 1984 இல் கட்டட நடவடிக்கைகளில் ஓர் வீழ்ச்சிப் போக்குக் காணப் பட்டது.

துறைவாரியான செயலாற்றம்

1982–84 காலப் பகுதிக்கான துறைவாரியான வளர்ச்சி வீதம் அட்டவணை 1.7 இல் தரப்பட்டுள்ளது. வேளாண்மை காட்டுத்தொழில், கடற்றொழில் முந்திய ஆண்டினைவிட 1984 இல் 2.2 சதவீதத்தினுல் அதிகரித்தது. தேயிலை துணைத் துறையின்கூட்டப்பட்ட பெறுமதி 16.1 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்த வேளையில் இறப்பர் துணைத்துறை 1.5 சதவீதத்தினுல் விரிவடைந்தது. கடந்த காலத்தில் உள்நாட்டு வேளாண்மை குறிப்பாக நெல் துணைத்துறை மிகவும் இயக்கமுள்ளதாக விளங்கியது. எனினும் 1984 இல் நெல் அறுவடையில் கணிசமான பங்கு வெள்ளத்தினுல் அழிவடைந்தது. இது நெல் வெளியீட்டில் 2.4 சதவீத வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. பெருந்தோட்ட வேளாண்மையில் கடந்த மூன்று ஆண்டுகளில் கவனிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றுவதாகத் தேயிலையின் வெளியீடு 16.1 சதவீதத்தினுல் அதிகரித்தது. இறப்பரின் வெளியீட்டில் 1984 இல் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டது. தெங்குத் துணைத்துறை 1984 இலும் தொடர்ந்துவீழ்ச்சியடைந்து கூட்டப்பட்ட பெறுமதியில்14.3 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. ஆண்டின் பின்னரைப் பகுதியில் நாட்டின் வடக்குப் பகுதிகளில் கரையோர ஆழ்கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டமையினுல் கடற்றொழில்துறை சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது.

தயாரிப்புத்துறையை முழுமையாக நோக்கின் 1983 இன் 0.8 சதவீதமான மிகக் குறைந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 12.3 சதவீதத்தினுல் அதிகரித்தது. வேளாண்மைப் பதனிடலின் கூட்டப்பட்ட பெறுமதி 9.9 சதவீதத்தினுல் அதிகரித்தது. தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூட்டிய பெறுமதி முந்திய ஆண்டின் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் 15 சதவீதத்தினுல் அதிகரித்தது. அரசதுறைக் கைத்தொழில்கள் 7 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் தனியார்துறைக் கைத்தொழில்கள் 26 சதவீதத்தினுல் அதிகரித்தன. சிறுகைத்தொழில் துணைத்துறை 1984 இல் 4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

கட்டடத்துறையில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது. தனியார் துறையின் கட்டடவாக்க நடவடிக்கை 1984 இல் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1984 இல் கொழும்பு மாநகரசபையினுல் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டட வரைபடங்களின் எண்ணிக்கை 20 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. துரித மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரு முக்கிய செயற்றிட்டங்கள் (கொத்மலை, றன்தெனிகல) மட்டும் மிக உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டமையினுல் அரசதுறையின் கட்டட நடவடிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டது. விக்ரோறியா அணை, மினிப்பே வலதுகரை வடிகால் கால்வாய் என்பவற்றின் கட்டடவாக்கங்கள் நிறைவு செய்யப்பட்டன.

மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் என்பவற்றின் கூட்டிய பெறுமதி 1984 இல் 3.0 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1984 இல் மின்வலு உருவாக்கம் முந்திய ஆண்டினைவிட 6.9 சதவீதத்தினுல் அதிகரித்தது.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை முந்திய ஆண்டின் 4.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 5.5 சதவீதத்தினுல் அதிகரித்தது. அரசதுறைப் போக்குவரத்துப் பணிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1984 இல் வீழ்ச்சியினைக் காட்டியது. ஆனுல் தனியார் போக்குவரத்துப் பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட விரிவாக்கம் அரசதுறையில் ஏற்

அட்டவணை 1.7

## நிலையான விலைகளில் ( 1982 ) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1982 – 1984

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி ( ரூ. ப. இ. ) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982(அ) | 1983(அ) | 1984(அ) | 1982 | 1983 | 1984 | 1983 | 1984 | 1983 | 1984 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | –24,964 | 26,294 | 26,866 | 27.4 | 27.7 | 26.9 | 133.0 | 572 | 35.7 | 11.5 |
| 1.1 வேளாண்மை ... | 20,771 | 21,867 | 22,351 | 22.8 | 23.1 | 22.4 | 1,096 | 484 | 29.5 | 9.7 |
| 1.1.1 தேயிலை ... | 2,418 | 2,309 | 2,681 | 2.7 | 2.4 | 2.7 | – 109 | 372 | – 2.9 | 7.5 |
| 1.1.2 இறப்பர் ... | 770 | 865 | 878 | 0.8 | 0.9 | 0.9 | 95 | 13 | 2.5 | 0.3 |
| 1.1.3 தெங்கு ... | 3,263 | 2,992 | 2,564 | 3.6 | 3.2 | 2.6 | – 271 | – 428 | – 7.2 | – 8.6 |
| 1.1.4 நெல் ... | 5,484 | 6,318 | 6,166 | 6.0 | 6.7 | 6.2 | 834 | – 152 | 22.4 | – 3.1 |
| 1.1.5 ஏனையவை ... | 8,836 | 9,383 | 10,062 | 9.7 | 9.9 | 10.0 | 547 | 679 | 14.7 | 13.6 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,710 | 1,816 | 1,889 | 1.9 | 1.9 | 1.9 | 106 | 73 | 2.8 | 1.5 |
| 1.3 கடற்றொழில் ... | 2,483 | 2,611 | 2,626 | 2.7 | 2.7 | 2.6 | 128 | 15 | 3.4 | 0.3 |
| 2. சுரங்க அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 2,238 | 2,413 | 2,449 | 2.5 | 2.5 | 2.5 | 175 | 36 | 4.7 | 0.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 13,601 | 13,710 | 15,390 | 14.9 | 14.4 | 15.4 | 109 | 1,680 | 2.9 | 33.7 |
| 3.1 ஏற்றுமதி பதனிடல் ... | 2,846 | 2,715 | 2,983 | 3.1 | 2.8 | 3.0 | – 131 | 268 | – 3.5 | 5.4 |
| 3.2 தொழிலகக் கைத்தொழில் ... | 8,777 | 8,953 | 10,296 | 9.6 | 9.4 | 10.3 | 176 | 1,343 | 4.7 | 26.9 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 1,978 | 2,042 | 2,111 | 2.2 | 2.2 | 2.1 | 64 | 69 | 1.7 | 1.4 |
| 4. கட்டடவாக்கம் ... | 7,959 | 8,039 | 8,030 | 8.7 | 8.4 | 8.0 | 80 | – 9 | 2.2 | – 0.2 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,089 | 1,161 | 1,196 | 1.2 | 1.2 | 1.2 | 72 | 35 | 1.9 | 0.7 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 10,666 | 11,146 | 11,759 | 11.7 | 11.8 | 11.8 | 480 | 613 | 12.9 | 12.3 |
| 7. மொத்த சில்லறை வர்த்தகம் ... | 19,694 | 20,738 | 22,029 | 21.5 | 21.9 | 22.0 | 1,044 | 1,291 | 28.0 | 25.9 |
| 7.1 இறக்குமதிகள் ... | 8,812 | 8,981 | 9,161 | 9.6 | 9.5 | 9.2 | 169 | 180 | 4.5 | 3.6 |
| 7.2 ஏற்றுமதிகள் ... | 2,018 | 1,964 | 2,194 | 2.2 | 2.1 | 2.2 | – 54 | 230 | – 1.4 | 4.6 |
| 7.3 உள்நாட்டு ... | 8,864 | 9,793 | 10,674 | 9.7 | 10.3 | 10.6 | 929 | 881 | 24.9 | 17.7 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 2,230 | 2,707 | 3,005 | 2.4 | 2.9 | 3.0 | 477 | 298 | 12.8 | 6.0 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,250 | 3,315 | 3,381 | 3.6 | 3.5 | 3.4 | 65 | 66 | 1.7 | 1.3 |
| 10. பொது நிர்வாகமும் பாதுகாப்பும் ... | 2,899 | 3,786 | 4,165 | 3.2 | 4.0 | 4.2 | 887 | 379 | 23.8 | 7.6 |
| 11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் ... | 4,604 | 4,590 | 4,636 | 5.0 | 4.8 | 4.6 | – 14 | 46 | – 0.4 | 0.9 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்திகள் ... | 93,194 | 97,899 | 102,906 | 102.1 | 103.1 | 103.0 | 4,705 | 5,007 | 126.2 | 100.4 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | – 1,959 | – 2,936 | – 2,957 | – 2.1 | – 3.1 | – 3.0 | – 977 | – 21 | – 26.2 | – 0.4 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 91,235 | 94,963 | 99,949 | 100.0 | 100.0 | 100.0 | 3,728 | 4,986 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பட்ட வீழ்ச்சியினை விஞ்சிய வகையில் எதிரீடு செய்தது. இலங்கைத் துறைமுக மேலாண்மைச் சபையினுல் கையாளப்பட்ட பொருட்களின் அளவு 1984 இல் 13 சதவீதத்தினுல் அதிகரித்தது.

மொத்த, சில்லறை வர்த்தகத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 1983 இன் 5.3 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 1984 இல் 6.2 சதவீதத்தினுல் அதிகரித்தது. ஏற்றுமதி வர்த்தகத்திலான கூட்டப்பட்ட பெறுமதி 11.7 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் உள்நாட்டு வர்த்தகம் 9.0 சதவீதத்தால் அதிகரித்தது. இறக்குமதி வர்த்தகத்தின் கூட்டப்பட்டபெறுமதி சிறிதளவு அதிகரித்தது.வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் துறையிலிருந்து கிடைத்த வரவு முந்திய ஆண்டின் 21.4 சதவீத வளர்ச்சிக்கு மாருக 11 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்தது.

வதிவிட உடைமைகளின் கூட்டிய பெறுமதி 2.0 சதவீதத்தினுல் அதிகரித்தது. பொது நிருவாகம், பாதுகாப்பு ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதியில் 1983 இல் அவதானிக்கப்பட்ட பெருமளவு அதிகரிப்புக்கள் 1984 இலும் தொடர்ந்துகாணப்பட்டு 10.0 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஏனைய பணிகள்துறை முந்திய ஆண்டில் அது அடைந்த வீழ்ச்சியிலிருந்து சிறிதளவு முன்னேறியது.

செலவுப் போக்கு

மொத்த உள்நாட்டுச் செலவின் விரிவாக்க வீதத்தில் சிறிதளவு வேகமின்மை காணப்பட்டது. 1984 இல் நடைமுறை விலைகளிலான மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 1,599,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1983 இல் ஏற்பட்ட ரூ. 215,000 இலட்சம் அல்லது 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983 இனை விட ரூ. 199,000 இலட்சம் அல்லது 14.2 சதவீத அதிகரிப்பாக விளங்கியது. தனியார் நுகர்வுச் செலவு 15.5 சதவீதத்தினுல் அதிகரித்து. ரூ. 1,103,000 இலட்சத்தினை அடைந்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதான செலவு 20.5 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் பொருட்கள், காரணியல்லாப் பணிகள் மீதான செலவு 1.6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. அரச துறையின் நுகர்வு முந்திய ஆண்டினைவிட 16 சதவீதத்தினுல் அதிகரித்தது.

கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தினையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் 10.5 சதவீதத்தினுல் அதிகரித்தது. தனியார்துறை அரச கூட்டுத்தாபனங்கள் இரண்டிலுமான மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின், 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தினுல் அதிகரித்தது. அரசதுறையில் 1983 இல் 35.4 சதவீதத்தினுல் அதிகரித்த மொத்த மூலதன ஆக்கம் 1984 இல் 12.6 சதவீதத்தினுல் அதிகரித்தது.

அட்டவணை 1.8

## மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 30,028 | 36,273 | 39,700 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) ... | 11,034 | 10,900 | 11,443 |
| 3. கப்பல்களும் வான் கலங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா.க. பெறுமதிகளில்) | 7,597 | 9,298 | 10,343 |
| 4. இறக்குமதி உள்ளடக்கம் (1இன் சதவீதமாக 2) ... | 36.7 | 30.0 | 28.8 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,
இலங்கைச் சுங்கம்.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 20.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 9.4 சதவீதத்தினுல் அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி முந்திய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 1.2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தினுல் அதிகரித்தது. கப்பல்கள் வான்கலங்கள் நீங்கலான மூலதனப் பொருட்களின் இறக்குமதி முந்திய ஆண்டின் 22.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 11.2 சதவீதத்தினுல் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் இறக்குமதியின் அளவு 1984 இல் 28.8 சதவீதமாக இருந்தது.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தில் 81 சதவீதம் தனியார் துறையிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் இடம் பெற்றது. மூலதன ஆக்கத்தில் பெரும்பங்கு கட்டடம் மற்றும் நிர்மாணத்தில் ஏற்பட இதனைத் தொடர்ந்து பொறித்தொகுதிகளும் பொறிகளும் விளங்கின. நிருமாண நடவடிக்கைகளில் நடைமுறை விலைகளிலான மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 34 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 14 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1984 இல் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிருமாண வேலைகளின் பெறுமதி ரூ. 67,000 இலட்சமாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொறிகள், பொறித்தொகுதிகள், துணைக்கருவிகளிலான மூலதன ஆக்கம் 1 சதவீதத்தினுல் அதிகரித்தது. காணி அபிவிருத்தி, மீள்நடுகை என்பவற்றினுல் ஏற்பட்ட மூலதன ஆக்கம் நடைமுறை விலைகளில் ஏறக்குறைய 7.8 சதவீதத்தினுல் அதிகரித்தது.

அட்டவணை 1.9

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் 1978—1984

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) 1978 | 1982(அ) | 1983(அ) | 1984(அ) | 1978 விலைகளில் 1978 தொகை ப.இ. ரூ. | % | 1982(அ) தொகை ப.இ.ரூ. | % | 1983(அ) தொகை ப.இ.ரூ. | % | 1984(அ) தொகை ப.இ.ரூ. | % | சதவீத அதிகரிப்பு 1982 இற்கு மேலாக 1983 | 1983 இற்கு மேலாக 1984 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 145,674 | 172,045 | 204,532 | 59,537 | 100 | 78,328 | 100 | 81,472 | 100 | 84,508 | 100 | 4.0 | 3.7 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 99,769 | 121,664 | 151,575 | 42,665 | 72 | 53,355 | 68 | 56,049 | 69 | 58,907 | 70 | 5.0 | 5.1 |
| 1.2 பொருட்கள், காரணியல் லாப் பணிகளில் இறக்கு மதிகள் ... | 16,872 | 45,905 | 50,381 | 52,957 | 16,872 | 28 | 24,973 | 32 | 25,423 | 31 | 25,601 | 30 | 1.8 | 0.7 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 145,674 | 172,045 | 204,532 | 59,537 | 100 | 78,328 | 100 | 81,472 | 100 | 84,508 | 100 | 4.0 | 3.7 |
| 2.1 நுகர்வு ... | 36,148 | 88,250 | 103,966 | 120,099 | 36,148 | 61 | 48,940 | 63 | 51,074 | 63 | 51,840 | 61 | 4.4 | 1.5 |
| 2.2 மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 8,521 | 30,028 | 36,273 | 39,700 | 8,521 | 14 | 13,305 | 17 | 14,395 | 17 | 14,568 | 17 | 8.2 | 1.2 |
| 2.2.1 அரசு ... | (3,077) | (4,793) | (6,659) | (7,485) | (3,077) | (5) | (3,239) | (4) | (4,049) | (5) | (4,149) | (5) | 25.0 | 2.5 |
| 2.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் | (2,056) | (10,881) | (29,614) | (32,215) | (2,056) | (3) | (4,710) | (6) | (10,346) | (12) | (10,449) | (12) | 2.8 | 1.0 |
| 2.2.3 தனியார்துறை ... | (3,388) | (14,354) | | | (3,388) | (6) | (5,356) | (7) | | | | | | |
| 2.3 இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 248 | –210 | 150 | 33 | — | 73 | — | –55 | — | 36 | — | — | — |
| 2.4 பொருட்களின் ஏற்றுமதி காரணியல்லாப் பணிகளும் ... | 14,835 | 27,148 | 32,016 | 44,583 | 14,835 | 25 | 16,010 | 20 | 16,058 | 20 | 18,064 | 22 | 0.3 | 12.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

அண்மை ஆண்டுகளில் இலங்கை உள்நாட்டு மூலவளங்களில் தங்கியிருத்தலுக்கு முக்கிய இடமளித்தது. 1984 இல் பொருளாதாரத்தில் கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த மூலவளங்களில் உள்நாட்டு உற்பத்தி 74 சதவீதத்தினைப் பிரதிபலித்து இப்போக்கிற்கு மேலும் பலமூட்டியது. இவற்றின் 1983, 1982 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பிடத்தக்க தரவுகள் முறையே 71 சதவீதமும் 68 சதவீதமும் ஆகும். 1984 இல் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த மூலவளங்கள் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ. 2,045,000 இலட்சமாக விளங்கின. இம்மொத்தத்தொகையில் ரூ. 1,516,000 இலட்சம் உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைத்தவேளையில் ரூ. 530,000 இலட்சம் இறக்குமதிகளிலிருந்து கிடைத்தது.

மொத்த மூலவளங்களில் ரூ. 1,201,000 இலட்சம் அல்லது 58.7 சதவீதம் நுகர்வில் செலவிடப்பட்ட வேளையில் ரூ. 398,000 இலட்சம் அல்லது 19.5 சதவீதம் மூலதன ஆக்கத்தில் செலவிடப்பட்டது. பொருட்கள், காரணியல்லாத பணிகள் என்பவற்றின் ஏற்றுமதி ரூ. 446,000 இலட்சமாக விளங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29 சதவீதத்தை வகித்தன. 1982, 1983 ஆம் ஆண்டுகளின் ஒப்பிடத்தக்க எண்தொகைகள் முறையே 27 சதவீதமாகவும், 26 சதவீதமாகவும் விளங்கியதுடன் கடந்த கால செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் இது சாதகமான ஒன்றாக விளங்குகின்றது.

1978 இன் நிலையான விலைகளில் மதிப்பிடுகையில் மொத்த மூலவளங்கள் 1984 இல் 3.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதிகள் 0.7 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த நுகர்வு உண்மை நியதிகளில் 1984 இல் 1.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 1.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச துறையின் மூலதன ஆக்கம் உண்மை நியதிகளில் 2.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தனியார் துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் மூலதன ஆக்கம் 1 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 1.10

**தேசிய சேமிப்புக்கள் 1982 – 1984 (நடைமுறைச் சந்தை விலைகளில்)**

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | 1982(அ) | 1983(அ) | 1984(அ) |
|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 99,769 | 121,664 | 151,575 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... ... | 11,519 | 17,698 | 31,476 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் ... | – 1,959 | – 3,214 | – 3,356 |
| 4. தேறிய தனியார் மாற்றல்கள் ... ... | 5,494 | 6,441 | 7,039 |
| 5. தேசிய சேமிப்புக்கள் ... ... | 15,054 | 20,925 | 35,159 |
| 6. உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் (1இன் சதவீதமாக2) ... | 11.5 | 14.5 | 20.8 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) ... | 15.1 | 17.2 | 23.2 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

*1983* இல் ரூ. *177,000* இலட்சமாக விளங்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் *78* சதவீதத்தினுல் அதிகரித்து *1984* இல் ரூ. *315,000* இலட்சமாக விளங்கின. இதுவே அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட சேமிப்புக்களின் அதிகரிப்பில் ஏற்பட்ட ஆகக்கூடிய வீதமாகும். *1983* இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் *53.6* சதவீதத்தினுல் அதிகரித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (சந்தை விலைகள்) சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்களை நோக்குகையில் இது *1983* இன் *14.5* சதவீதத்திலும் *1982* இன் *11.5* சதவீதத்திலுமிருந்து *1984* இல்*20.8* சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்தது. தேறிய வெளிநாட்டுக் காரணி வருவாயையும், தனியார் மாற்றல்களையும் உள்ளடக்கிய மொத்த தேசிய சேமிப்புக்கள் ரூ. *352,000* இலட்சமாக அமைந்துமுந்திய ஆண்டினைவிட *68* சதவீதம் கூடுதலாக விளங்கியது. தேசிய சேமிப்புக்கள்—மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரம் *1983* இன் *17.2* சதவீதத்திலும், *1982* இன் *15.1* சதவீதத்திலுமிருந்து *1984* இல் *23.2* சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்தது.

## விளக்கக்குறிப்பு - பகுதி II

### தேசிய கணக்குகளின் புதிய தொடர்கள்

உள்நாட்டு, பன்னுட்டுப் பொருளாதார மாற்றங்களினுல் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பு ரீதியான மாற்றங்களை உள்ளடக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கி 1983 இல் தேசிய கணக்குகளில் யாவையும் உள்ளடக்கிய மீளாய்வினைச் செயற்படுத்தியது. 1983 ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்ட இதன் முதற்கட்டத்தின் பெறுபேறுகள்—

(i) வேளாண்மை,
(ii) வேளாண்மைச் செயல் முறை,
(iii) கடற்றெழில்,
(iv) சுரங்க அகழ்வும் கல்லுடைத்தலும்,
(v) மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள்,
(vi) குடியிருப்புக்களின் உடைமைகள்,
(vii) பொது நிருவாகம் என்பன தொடர்பானதாக விளங்கியது.

இரண்டாவது கட்டம் தொடர்பான திருத்தம்:

(viii) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்,
(ix) மொத்த சில்லறை வர்த்தகம்,
(x) ஏனைய பணிகள் என்பன தொடர்பானதாக விளங்கியது.

அட்டவணை 1 (அ) மீளாய்வின் இரண்டாவது கட்டத்துடன் தொடர்புடைய துறைகளின் புதிய தொடர்களினதும் பழைய தொடர்களினதும் கூட்டிய பெறுமதியின் ஒப்பீட்டினைத் தருகின்றது.

அட்டவணை 1 (அ)

**புதிய (1982) தொடர்கள் பழைய (1970) தொடர்களில்**
**கூட்டப்பட்ட பெறுமதியின் ஒப்பீடு**

(ரூ. ப. இலட்சங்களில்)

| துறை | | பழைய தொடர் | புதிய தொடர் | மாற்றம் |
|---|---|---|---|---|
| 8. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | ... | 8,536 | 10,666 | + 2,130 |
| 9. மொத்த, சில்லறை வர்த்தகம் | ... | 16,059 | 19,694 | + 3,635 |
| 9.1 இறக்குமதிகள் | ... | 4,167 | 8,812 | + 4,645 |
| 9.2 ஏற்றுமதிகள் | ... | 2,861 | 2,018 | — 843 |
| 9.3 உள்நாடு | ... | 9,031 | 8,864 | — 167 |
| 10. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் | ... | 8,698 | 4,604 | — 4,094 |
| மொத்தம் | | 33,293 | 34,964 | + 1,671 |

இக் குறிப்பின் பகுதி 1 இலங்கை மத்திய வங்கியின் 1983-ஆம் ஆண்டறிக்கையில் தரப்பட்டது.